தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O. No. 341, Dt. 22-03-1980)

## TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHER'S ASSOCIATION

TNGCTA நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–600 005. Ph : 28516573, Telefax : 28414354

**முனைவர்.இரா.வெங்கடாசலம்** தலைவர் | **முனைவர்.சி.திருச்செல்வம்** பொதுச்செயலர் | **முனைவர்.இரா.முகமதுரியாஸ் இக்பால்** பொருளர்

**முனைவர்.தி.அறிவுடைநம்பி**
**முனைவர்.உஷா ரகோத்தம்**
துணைத் தலைவர்கள்

**பேரா.இரா.நிர்மல்குமார் இராச பிரகாஷ்**
**முனைவர்.ச.காமாட்சி**
இணைச் செயலர்கள்

சுற்றறிக்கை எண். 1/2015 நாள் :07-05-2015

இனிய தோழர்களே! தோழியரே! வணக்கம்.

நமது இயக்கத்தின் மாநிலத்தேர்தல் 27-07-2014 அன்று திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. ஆனால் விரைவாக நீதிமன்ற வழக்கை முடித்துப் பின்னர் புதிய ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தல் முடிவினை அறிவிக்கவேண்டுமென்ற சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்பது நிறுத்திவைக்கப்பட்டது யாவரும் அறிந்ததே. நமது ஆட்சிக்குழுவின் தொடர்முயற்சியால் நீதிமன்றம் நமது சங்க வழக்கின் இறுதிக்கட்டத் தீர்ப்பினை சமீபத்தில் வெளியிட்டது (OS/4284,2013/10-04-2015). இத்தீர்ப்பின் அடிப்படையில் 15-04-2015 அன்று புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சிக்குழு உறுப்பினர்களின் தேர்தல் முடிவினை மாநிலத் தேர்தல்குழு அறிவித்துள்ளது. புதிய ஆட்சிக்குழு உறுப்பினர்களின் விவரம் வருமாறு.

### புதிய ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தலைவர் | : முனைவர்.**இரா.வெங்கடாசலம்,**<br>அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, நாமக்கல், 9443552154. |
| துணைத்தலைவர்கள் | : முனைவர்.**தி.அறிவுடைநம்பி,**<br>மன்னர் சரபோஜி அரசு கல்லூரி (தன்னாட்சி) , தஞ்சாவூர், 9443618023.<br>: முனைவர்.**உஷாரகோத்தம்,**<br>திரு அ.கோ. அரசு கலைக்கல்லூரி, திண்டிவனம், 9443292885. |
| பொதுச்செயலாளர் | : முனைவர்.**சி.திருச்செல்வம்,**<br>மா.மன்னர் கல்லூரி (தன்னாட்சி), புதுக்கோட்டை, 9600860274. |
| இணைச்செயலர்கள் | : பேரா.**இரா.நிர்மல்குமார் இராச பிரகாஷ்,**<br>அரசு கலைக்கல்லூரி, திருவண்ணாமலை, 9443874736.<br>: முனைவர்.**ச.காமாட்சி,**<br>மாநிலக்கல்லூரி (தன்னாட்சி), சென்னை, 9940593079. |
| பொருளாளர் | : முனைவர்.**இரா.முகமதுரியாஸ் இக்பால்,**<br>அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம், 9994710900. |

5. கிளை, மண்டலப் பொறுப்பாளர்கள் அடுத்த கிளை, மண்டலத் தேர்தல்கள் நடைபெறும் வரை பொறுப்பில் நீடிக்க ஒப்புதல் வழங்கப்படுகிறது.
6. மாற்றுப்பணியில் சென்றுள்ள ஆசிரியர்கள் அவர்கள் முன்னர் பணியாற்றிய கல்லூரியிலேயே உடனடியாகப் பணியமர்த்துமாறு கல்லூரிக்கல்வி இயக்குனர் அவர்களை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது. அவர்களை விரைவில் பணியமர்த்தாவிடில் மாநில அளவில் போராட்டம் நடத்துவது என்றும் இச்செயற்குழு தீர்மானிக்கின்றது.
7. அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்களை மாற்றுப்பணியில் அரசுக் கல்லூரிகளில் நியமிக்கும் போது நிர்வாகக் குழறுபடிகளும் ஆசிரியர்களிடையே பணிமூப்பு கருத்து வேறுபாடு போன்ற சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆதலால் அரசு இதைக்கைவிடவேண்டுமென கேட்டுக்கொள்கிறது.
8. நமது சங்கத்தை உடனடியாகப் பதிவு செய்வதற்கும், சங்க விதிகளைத் திருத்தம் செய்வதற்கும் தனித்தனியாகக் குழுக்களை அமைத்து, அப்பணிகளை மேற்கொள்ள ஆட்சிக்குழுவிற்கு இச்செயற்குழு அதிகாரம் வழங்கி ஒப்புதல் அளிக்கிறது.
9. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்லூரிகளுக்குத் தேவையான ஆசிரியர்களைக்கணக்கிட்டு உடனடியாகப் பணியமர்த்துமாறு இச்செயற்குழு அரசைக்கேட்டுகொள்கிறது.
10. புதிதாகப் பொறுப்பேற்றுள்ள ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பெயரில் நமது சங்க வங்கிக் கணக்கை மாற்றம் செய்துகொள்வதற்கு இச்செயற்குழு ஒப்புதல் அளிக்கிறது.
11. தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கல்லூரி முதல்வர் க.ராஜலெட்சுமி அவர்களின் ஏதேச்சதிகார மற்றும் ஆசிரியர் விரோதப்போக்கை இச்செயற்குழு கண்டிக்கிறது. இதுதொடர்பாக உரிய விசாரணைமேற்கொண்டு துறைவாரியான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கல்லூரிக்கல்வி இயக்குனரைக் கேட்டுகொள்கிறது.
12. நமது இயக்க நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள்மீது உரிய ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்வது என இச்செயற்குழுவில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.
13. 1998 TRB ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக மானியக்குழு வழிகாட்டுதலின்படி தேர்வுநிலையில் ரூ.23890 ஊதிய நிர்ணயம் செய்யத் தமிழக அரசைக்கேட்டுக்கொள்கிறது.
14. நிரந்தர பகுதி நேர விரிவுரையாளர்கள் 3 பேர் அரசுக்கல்லூரியில் பல ஆண்டுகளாக மிகக் குறைவான ஊதியத்தில் பணியாற்றிவருகிறார்கள். அவர்களின் நிலையைப் பரிசீலித்து பணிவரன் முறைபடுத்துமாறு அரசை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

### கிளை / மண்டலச் செயலர்கள் கவனத்திற்கு

1. 2007-குப் பிறகு பணியில்சேர்ந்த TRB ஆசியர்களுக்குரிய பணிமேம்பாட்டுக் கருத்துருக்களை, அலுவலகத்தில் தயார் செய்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
2. சங்கத்தேர்தல் விரைவில் நடைபெற ஏதுவாக 2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்குரிய சந்தாவைப் பெற்று தலைமைக்கு உடன் அனுப்பி வைக்கவும்.
3. கட்டிட நிதி செலுத்தாதவர்களிடம் நிதியைப்பெற்று அதற்குரிய வங்கிக்கணக்கில் செலுத்தவும்.
4. அய்ஃபெக்டோ கட்டிட நிதி ரூ.10,000 செலுத்தாத மண்டலங்கள் அதற்குரிய பொறுப்பாளர்கள் நிதியை உடன் பெற்று தலைமைக்கு அனுப்பிவைக்கவும்.
5. ஒவ்வொரு கிளைச்செயலரும் தங்கள் கிளைகளில் கட்டிடநிதிசெலுத்தியவர்கள் பெயர், துறை ஆகியவை அடங்கிய பட்டியலைத் தயார் செய்து தலைமைக்கு அனுப்பிவைக்கவும்.

**நமக்கு அனைத்தையும் பெற்றுத்தருவது இச்சங்கம் !**
**இதன் அறைகூவலுக்குத் தலை வணங்குவோம் !!**
**நிதிகள் அனைத்தையும் நிலுவையின்றிச் செலுத்துவோம் !!!**

தோழமையுடன்

சென்னை - 5
07-05-2015

**(சி.திருச்செல்வம்)**
பொதுச்செயலர்

**மாநிலச் செயற்குழு**

19-04-2015 அன்று காலை 10.30 மணியளவில் சென்னை தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் புதிய கட்டிடவளாகத்தில் மாநிலத் தலைவர் முனைவர் இரா. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொறுப்பாளர்கள் எதிர்கால சங்க நடவடிக்கைபற்றி விளக்கித் தாம் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்கு நன்றி தெரிவித்தனர். முந்தைய ஆட்சிக்குழு உறுப்பினர்கள் இதுகாறும் ஒத்துழைப்பு நல்கியமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

**இரங்கல் தீர்மானம்**

செயற்குழுக்கூட்டத்தின் தொடக்கத்தில் நமது இயக்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் பேரா.இரா.இளவரசு, பேரா.எஸ். கிருஷ்ணமூர்த்தி கணிதத்துறை, அரசு ஆடவர் கல்லூரி, கும்பகோணம், பேரா.ஆர்.சுப்பிரமணி, வரலாற்றுத்துறை, மாநிலக்கல்லூரி, சென்னை, பேரா.எஸ்.காத்தமுத்து, தமிழ்த்துறை, ம.இரா.அரசு கலைக்கல்லூரி, மன்னார்குடி, பேரா.ராஜா வேதியியல் துறை மன்னர் சேதுபதி அரசு கலைக்கல்லூரி, ராமநாதபுரம் ஆகியோரது மறைவிற்குச்செயற்குழு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தியது.

**கவன ஈர்ப்புத்தீர்மானம்**

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்கு மாற்றுப் பணியில் சென்றுள்ள ஆசிரியர்களை அவர்கள் முன்னர் பணியாற்றிய கல்லூரிகளிலேயே பணியமர்த்த வேண்டும் என்று மதுரை மண்டலம் கவன ஈர்ப்புத்தீர்மானம் கொண்டுவந்தது. இக்கோரிக்கை தொடர்பான முன்னேற்ற நடவடிக்கைகளைப் பொதுச்செயலர் தனது அறிக்கையில் தெரிவிப்பார் என்று கூறி அடுத்த நிகழ்வுகளை மாநிலத் தலைவர் தொடங்கினார்.

**தலைவர் உரை**

தொடர் நடவடிக்கைக் குழுவின் தொய்வில்லாத இயக்க நடவடிக்கையால் ராசிபுரம் மாநிலச் செயற்குழுவிற்குப் பிறகு நாம் வென்றெடுத்த கோரிக்கைகள் குறித்து விரிவாகப்பேசினார். நமது சங்கத்தைப் பதிவு செய்வது குறித்த முக்கியதுவத்தையும் நடைபெற இருக்கின்ற நமது சங்கத்தேர்தலுக்கு முன் விதித்திருத்தம் செய்வதுகுறித்த கட்டாயத்தையும் எடுத்துக் கூறினார். உயர்கல்வி வணிகமயமாகிவரும் சூழலில் நாம் எந்த ஒரு கோரிக்கையும் போராடினால்தான் வென்றெடுக்கமுடியும் என்பதற்குச் சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற மறியல் போராட்டம் ஒரு சான்றாகும். எனவே உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருந்து இயக்கத்தை வலிமைபெறச்செய்து தனி நபர் பிரச்சினைகளைத் தவிர்த்துப் பொதுவான பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டும் என்று கூறினார்.

**பொதுச்செயலர் அறிக்கை**

நமது இயக்கம் பல்வேறுகட்டப் பேச்சு வார்த்தைகளையும் போராட்டங்களையும் நடத்திய பின்னணியில் நிறைவேற்றித்தருவதாக ஒத்துக்கொள்ளப்பட்ட கோரிக்கைகளின் நிலைகுறித்தும் பிறகோரிக்கைகள் குறித்தும் அமைச்சர் மற்றும் செயலரோடு பேச்சுவார்த்தை நடத்தியது போன்ற இயக்கச்செய்திகளை அறிக்கையாகச் சமர்ப்பித்தார். அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்ட சில கோரிக்கைகள்;

- சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற மாநிலச் செயற்குழுவிற்குப்பின் நமது இயக்கத்தின் முக்கிய கோரிக்கையான 2006க்கு பிறகு பணியில் சேர்ந்த ஆசிரியர்களுக்குப் பணி மேம்பாடு வழங்கி அதற்குரிய AGPரூ 6000-7000. 1-4-2015 முதல் வழங்குவதற்கு அரசாணை வெளியிட்டுள்ளது (MS No. 78/23-04-2015). இது குறித்தும் கோரிக்கைகளின் தொடர் நடவடிக்கைகளுக்காகவும் ஆட்சிக்குழுக் கூட்டம் 29-04-2015 அன்று சென்னையில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மாலை உயர்கல்வித் துறை அமைச்சர், செயலர் மற்றும் கல்லூரிக் கல்வி இயக்குனருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டுப் பிற கோரிக்கைகள் பற்றியும் பேசப்பட்டது.TRB 2007 ஆசிரியர்களுக்குரிய நிலுவைத்தொகையும் அரசிடம்பெற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- மாற்றுப்பணியில் பிறகல்லூரிகளுக்குச் சென்றுள்ள ஆசிரியர்களை அவர்கள் முன்னர் பணியாற்றிய கல்லூரியிலேயே விரைவில் பணியமர்த்துவதாக அரசு உறுதியளித்துள்ளது.
- 2013 பிப்ரவரி 20 மற்றும் 21 தேதிகளில் நடைபெற்ற அகில இந்திய வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட நமது உறுப்பினர்கள் இரண்டுபணி நாட்களும் ஈடுசெய்யப்பட்டுள்ளதால் அதை பணி நாட்களாகக் கருதி ஆணை வழங்குவதாக அரசு உறுதி அளித்துள்ளது.
- நீண்ட நாள் கோரிக்கையான 10a(1) ஆசிரியர்களுக்கு உரிய உயர் ஊதியம் 14940 கருத்துரு கல்லூரிக் கல்வி இயக்குனரகத்திலிருந்து அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.
- TRB 98 ஒருங்கிணைந்த பணி மூப்புப் பட்டியல் விரைவில் அரசு வெளியிடுவதற்குரிய தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- சமீபத்தில் தேர்வுசெய்யப்பட்டுள்ள TRB ஆசிரியர்களின் தெரிவுப்பட்டியல் கல்லூரிக் கல்வி இயக்குனருக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே விரைவில் நியமன ஆணை அரசால் வழங்கப்படவுள்ளது.
- கல்லூரி திறப்பதற்குமுன் காலியாக உள்ள மண்டல இணைஇயக்குனர், முதல்நிலை, இரண்டாம்நிலை கல்லூரி முதல்வர்கள் பணியிடங்கள் உடனடியாக நிரப்பப்படவேண்டும் என்று அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.
- வரும் கல்வியாண்டில் ஜுன் மாதத்திற்குள் அரசு விதிமுறைகளின்படி ஆசிரியர்களுக்குரிய பொதுப்பணியிட மாற்றக் கலந்தாய்வு முறையை நடத்தப்பட வேண்டும் என்று உயர்கல்வித்துறை அமைச்சரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**அய்ஃபெக்டோ போராட்டம்**

13-03-2015 வெள்ளிக்கிழமை அன்று புதுடில்லி ஜந்தர் மந்தரில் 7வது யூ.ஜி.சி. ஊதிய திருத்தக்குழு அமைக்குமாறும் இன்னும் சில கோரிக்கைகள் குறித்தும் மத்திய அரசை வலியுறுத்தி ஆயிரத்திற்கு மேற்பட்டோர் மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பின்பு மாலை 6.00 மணிக்கு விடுவிக்கப்பட்டனர். நமது இயக்கத் தோழர்கள் 75பேர் கலந்துகொண்டனர். இதைத் தொடர்ந்து 14-03-2015 அன்று புதுடில்லியில் காலை 11 மணியளவில் அய்ஃபெக்டோ தேசியச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் இதுவரை அய்ஃபெக்டோ பொறுப்பாளர்களை சந்தித்துப் பேச மறுப்பதைக் கண்டித்தும் அவர்களை அழைத்துப் பேச வலியுறுத்தியும் 1.ஒவ்வொரு கல்லூரிக் கிளையும் ஏப்ரல் மாதத்தில் கடிதஇயக்கம் நடத்துவது, 2.மே மாதத்தில் அந்தந்த மாநிலங்களில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பது மற்றும் பல்கலைக்கழக/மண்டல அளவில் கூட்டங்கள் நடத்துவது, 3. ஜுன் மாதத்தில் மாநிலத் தலைநகரங்களில் கோரிக்கைகள் குறித்த ஊர்வலம் நடத்துவது, 4.ஜுலை மாதத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தம்செய்வது எனவும் அதேநாளில் அய்ஃபெக்டோ பொறுப்பாளர்கள் புதுடில்லி ஜந்தர் மந்தரில் உண்ணாவிரதம் மேற்கொள்வது எனவும் தேசியச் செயற்குழுவில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**மாநிலச் செயற்குழுவில் கோரிக்கைகள்குறித்து விரிவான விவாதங்கள் நடைபெற்று கீழ்க்கண்டதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

**தீர்மானங்கள்**

1. சிறப்பாகப் பணியாற்றிய முன்னாள் ஆட்சிக்குழு உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
2. நமது சங்கத்தேர்தலைச் சிறப்பாக நடத்திக்கொடுத்த மாநிலத் தேர்தல்குழு அமைப்பாளர் முனைவர்.ந.செல்வராசு, உறுப்பினர்கள் முனைவர்.நடராஜன், முனைவர். ஜோசப் துரை, ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.
3. நீதிமன்ற வழக்கினை நடத்தி வெற்றிபெறுவதற்கு உதவியாக இருந்த பேரா.ஜோசப் துரை, பேரா.இளங்கோவன், பேரா.தாமோதரன், பேரா.அன்புச்செல்வன் மேலும் கடலூர் கிளை செயலர் பேரா.நிர்மல்குமார், கிளைப் பொறுப்பாளர்கள் மற்றும் மண்டலப் பொறுப்பாளர்களுக்கும் இச்செயற்குழு நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.
4. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பொறுப்பேற்றுள்ள ஆட்சிக்குழு உறுப்பினர்கள் அடுத்த தேர்தலை நடத்தி, புதிய ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்கும் வரை இவர்கள் தங்களது பொறுப்பில் நீடிக்க மாநிலச் செயற்குழு ஒப்புதல் வழங்குகிறது.